சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.10.06.2025
OS.No. 151/2020
DW 1 : காசிநாதன் (வயது 43 ) த/பெ.கந்தசாமி
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் வழக்கின் 1 ஆம் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பு 1 ஆம் சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. 08.07.2019 ஆம் தேதியிட்ட பட்டா எண். 2625 க்கான எனது பெயருக்கான நில உடமை பதிவேடு கணிணி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.1**. 18.12.2024 ஆம் தேதியிட்ட பட்டா எண்.330 க்கான எனது பெயரில் உள்ள நில உடமை பதிவேடு கணிணி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.2**. ( எதிர்தரப்பினருக்கு அறிவிப்பு வழங்காமல் பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளது என்ற ஆட்சேபனைக்கு உட்பட்டு வருவாய் பதிவுகள் குறியீடு செய்யப்படுகிறது, வழக்கின் இறுதியில் இரு தரப்பு நிருபணத்தின்பேரில் தீர்வு காணப்படும் ) தாவா தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**குவி -** வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
காசிநாதன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி